www.tamilarangam.net

Raya

# மண்

கலை, இலக்கிய, சமூக மாத இதழ்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE ; FRANCE



இதழ்: 15

சித்திரை 1991

KULTIVIERUNG FÜR FRIEDLICHE ZUKUNFT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

நமது மொழி, இனம், மண்ணின் மீட்புக்காக குருதி சிந்தி போருக்கும், உயிர் கொடுத்தோருக்கும், உயிர் கொடுத்துக் கொண்டிருப் போருக்கும் இவ்விதழை சமர்ப்பிக்கின்றோம்.

## மண்

அரசியல், சமய சார்பற்றது

வாசிப்புகளால் மனிதன் பூரணமடைகிறான்


இது ஒரு இலவச வெளியீடு.

இவ்விதழை ஏனையோருக்கும் கொடுத்து உதவுங்கள்.

www.tamilarangam.net

# உள்ளே


* எங்கள் கருத்து
* சிறுவர் வட்டம்
* வினாவிடைப் போட்டி
* அமல அன்னை அன்பகம்
* கவிதைகள்
* இறையைத் தேடி
* செய்தித் துளிகள்
* குறுக்கெழுத்துப் போட்டி
* அர்த்தமற்ற விளையாட்டு
* தமிழ்த்தாய்
* அன்பர் குரல்.
* இலக்கியச் சந்திப்பு

www.tamilarangam.net

# எங்கள் கருத்து

உண்ண உணவின்றி உறக்கமின்றி, உடையின்றி உள்ளம் சோர்ந்த நிலையில் நம் உடன் பிறப்புக்களின் உருவங்களை நம் மனதில், மனக்கண்ணில் நிறுத்திப் பாருங்கள். அவர்கள் படுகின்ற அவலங்களை நாம் முன்புமாய் கருத்தில் எத்தனை போராட்டத்தை எடுத்துக்கொண்டிருந்தோம். அவர்கள் நாளுக்கு ஒரு வேளை உணவின்றி பட்டினி. இல்லை இப்படிச் சொன்னால் பொருந்தாது. மறந்தும் போன நாவினை நனைக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் அவர்கள் ஒரு வேளை உண்ணும் உணவோ, பெரும்பாலும் கஞ்சித்தண்ணியாகத்தான் இருக்கும்.

இந்திய அகதிமுகாம்களை நாம் பார்த்தபோது பலர் உணவின்றி கைவிடப்பட்டதுடன் மாற்றி அணியத் துணிகள் இல்லாதவர்களாகவும் காணப்பட்டனர். இவைகளும் எமது முன்னைய வெளியீடுகளில் குறிப்பிட்டதுதான். இவர்களுக்கு ஏதாவது செய்துவிட வேண்டுமென்று நாம் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. உடைகளோ, பணமோ அனுப்ப முடியாமைக்கு இந்தியாவின் சிக்கல்கள், அதிகாரிகளின் மறுதல்கள் என்பனவே காரணமாயின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று நமக்குக் கிடைத்தது. நமது நாட்டில் அனாதைச் சிறுவர்களை பராமரித்து வரும் 'அன்பு அன்னை அன்பகத்தின்' விழுதுகள், தாய், தந்தை, உடன்பிறப்புக்களை இழந்து அனாதை இல்லங்களில் வசித்துவரும் நம்மவர்கள் நம்மனதில் பதிந்து விட்டார்கள். இவர்களின் எதிர்கால வாழ்வை வளம்படுத்தும் நோக்கில் பல நிறுவனங்களும், பல தனிமனிதர்களும் உதவி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு முன்னின்று உதவி செய்யும் வசதியாளர்கள், சமூகத்தொண்டர்கள், சமூக நலன் விரும்பிகளின் விழுதுகள் நமக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்த அனாதைகளை ஒருகணம் நினைத்துப்பாருங்கள். நமக்கும் கண்ணீர் சிந்தத்தான் செய்யும். இவர்களுக்கு ஏதாவது வழியில் உதவி செய்ய நாம் திடம் கொள்வோம். உங்களின் கரங்களுடன் சேர்ந்துதான் அவர்களுக்கு பெரும் நன்மை செய்யலாம் என நம்புகிறோம். இதைவிடுத்து வேண்டா வெறுப்புடன் தொண்டு பிச்சையாகத்தானும் செய்வது இன்றைய நிலையில் தேவையானது.

எனவே இந்தச் சிறார்களின் நலனில் அக்கறை கொண்ட எல்லோரின் ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம். ஒற்றுமை ஓங்கட்டும்.

[மேலதிக விபரங்கள் 12, 13 பக்கங்களில்] பி.

www.tamilarangam.net




# சிறுவர்



## துணிந்தால் துக்கமில்லை

ஒரு மலையடிவாரத்தில் சின்ன சகோதர ஆட்டுக்குட்டிகள் வாழ்ந்து வந்தன. ஆனால் அவர்கள் வாழ்ந்த பகுதியில் தணிய கற்கள் மட்டும் இருந்தன. அவர்களுக்கு எதிர்ப்பகுதியில் பசுமையான புற்கள் நிறைந்திருந்தன. ஆனால் அவர்கள் அப்பகுதிக்கு செல்வதற்கு ஒரு நீரோடை தடையாக இருந்தது. பசி எடுக்கும் போது ஒவ்வொருவர் பார்த்து அந்தப் புல்லில் ஒருவாய் கடித்தால் நல்லாயிருக்கும் என்று பெருமூச்சு விடுவார்கள்.

ஒரு நாள் பசி எடுத்த போது சிறிய சகோதரன் சொன்னான் என்ன நடந்தாலும் பரவாயில்லை நான் இன்று அக்கரைக்குச் செல்கிறேன் அதற்கு மற்ற இருவரும் நீ முதலில் போ உன்னைத் தொடர்ந்து நாங்கள் வருகிறோம். என்றன. சிறிய ஆட்டுக்குட்டி அக்கரையை அடையும் போது நீரோடையில் இருந்தபடியே கேட்டது. எனது அரசவால் யார் போவது? இதோ கொன்று தின்னப் போகிறேன் என்றது. சிறிய ஆட்டுக்குட்டி நடுக்கத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் உலகத்தில் மிகவும் சிறியவன். எனது சகோதரன் என்னைவிடப் பெரியவன் அவனை சாப்பிடு என்றது. அப்படியென்றால் நீ போ என்றது. அடுத்து இரண்டாவது ஆட்டுக்குட்டி வந்தது. ஓநாய் திரும்பவும் யாரது இதோ உன்னை தின்ன வருகிறேன் என்றது. நானும் உலகத்தில் சிறியவனா? எனது சகோதரனைக் கொன்று தின் என்றது. அப்படியென்றால் நீயும் போ என்றது. அடுத்து பெரிய ஆடு வந்தது. அந்த பாலத்தை நெருங்கும் போது யாரது என்று கேட்டது. நான் பெரிய ஆடு என்றது. அப்படியா நான் உனது பெரிய சகோதரனைக் கொன்று தின்ன காவல் இருக்கின்றேன் என்று ஓநாய் சொன்னது. நான் தான் பெரியவன் என்று சொன்னது. ஆனா இதோ உன்னை கொன்று தின்னுகிறேன் என்று சொல்லியபடி ஓநாய் வெளியில் வர ஆடு தனது கொம்புகளால் ஓநாயை குத்திக் கொன்றது. அதன்பின்னர் மூன்றும் சந்தோசமாக பசுமையான புற்களை சாப்பிடப் போய்ச் சேர்ந்தன.

ஜினோஸ் - கருணாநிதி
3013, BARSINGHAUSEN

---

இம்மாதத்திற் சிறிய சிறந்த கதைக்கான 10 DM, பரிசைப் பெறுபவர்.
செல்வன் ஜினோஸ் - கருணாநிதி.
3013, BARSINGHAUSEN
பரிசு வழங்குபவர் திரு. ந. பரஞ்சோதி (DUISBURG) அவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கல்லாமையின் இழிவு

பைம்பொழில் ஒரு சிறிய கிராமம். அந்த ஊரில் பெரிய பணக்காரராக வாழ்ந்தவர் மருது. இவரிடம் தோட்டம், துரவு, வீடு, வாசல், நிலபுலன்கள் ஏராளம். அவருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் பெயர் கிரண். இளையவன் ரவி. மருதுவின் பணச் செருக்கு பிள்ளைகளின் படிப்பிற்கு கவனம் செலுத்தத் தடையாக இருந்தது. மூத்தவன் கல்வி கற்பதில் நாட்டம் செலுத்தவில்லை. உழவுத் தொழிலில் ஈடுபட்டான். ஆனால் ரவி கல்வி கற்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்து படிப்பில் தேர்ச்சி பெற்று தன் ஊருக்கு அருகே இருந்த கல்லூரியில் சேர்ந்து படித்தான். அவனது பண்பும் படிப்பும் அவனை மேல் நிலைக்கு உயர்த்தின. அவன் வேலை கிடைத்து மாவட்ட ஆட்சியாளராகப் பணியாற்றினான்.

மருதுவின் பிள்ளைகள் இருவரையும் நன்றாகப் படிக்க வைத்த சில ஆண்டுகளில் மருது இறந்துவிட்டார். மூத்தவன் பருவத்திற்கேற்ப பயிர் வகைகளை பயிரிட்டான். விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்று பணம் சேர்த்தான். சேர்த்த பணத்தை எண்ணிப் பார்க்கக் கூடத் தெரியாமல் விழித்தான். அவனுடைய மனைவி பணம் முழுவதையும் வீட்டில் வைத்திருக்க வேண்டாம் வங்கியில் சேமித்து வைக்கும்படி அறிவுறுத்தினாள். அவனோ 10 ஆயிரம் ரூபாயை எண்ணிக் கொடுத்து அனுப்பினான். பணத்துடன்

வங்கிக்குச் சென்ற போது வங்கியில் பணத்தைச் செலுத்தத் தெரியாமல் விழித்தான். அவனைப் பார்த்த வங்கி மேலாளர் கையெழுத்துப் போடத் தெரியுமா? எழுத்துக் கூடப் படிக்கவில்லையே "பணம் இருந்தும் என்ன பயன்" என்று வருத்தத் கூறினார். அதனால் கோபம் கொண்ட போது வங்கியில் பணத்தைச் செலுத்தாமல் வேகமாக வந்து பஸ் வண்டியில் வீடு வந்து சேர்ந்தான்.

பஸ் வண்டியை விட்டு இறங்கிய போது, தான் வைத்திருந்த பணம் காணாமல் போனதை அறிந்து அழுது புலம்பினான். பணத்தைப் பறிகொடுத்த போது மனதில் கவலையும் சொல்லவும் தயங்கினான். பிறர் உதவியின்றி அவனால் எதுவும் செய்ய முடியாது. அப்போது அவமானப் பட வேண்டும் என்று நினைத்தான் அன்றுதான் அவன் கல்வி கற்காமல் போனதை எண்ணி மனம் வருந்தினான்.

காலம் கடந்தது, தோட்டத் தொழிலில் ஈட்டிய செல்வம் முழுவதையும் வீட்டிலேயே பூட்டி வைத்தான். ஒரு நாள் ஒரு திருமணத்திற்காக வெளியூர் சென்றிருந்தான் அன்று பெய்த பெருமழை காரணமாக ஊர் திரும்ப முடியவில்லை. பெருமழை, புயல் அடித்து வெள்ளம் பெருக்கெடுத்தது. மரங்கள் சாய்ந்தன. வீடுகள் இடிந்தன. ஆறுகள் உடைப்பெடுத்தன. அவ்வூரே நீரில் மூழ்கியது.

www.tamilarangam.net

அவ்வூர் மக்கள் வீடு வாசல்களை இழந்து கோயில், பள்ளிகளில் தஞ்சமடைந்தார்கள். கோபு ஊர் திரும்பிய போது அவனது வீடும் வெள்ளத்தில் மூழ்கியிருந்ததைக் கண்டான். சேமித்த பணமும் வெள்ளத்தில் அடித்துச் சென்றதை அறிந்து கண்ணீர் விட்டுக் கதறினான். வெள்ளம் மற்றும் புயல் அழிவுகளை மதிப்பீடு செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும் அவ்வூருக்கு ஒரு குழு வந்தது. அப்போதைய மாவட்ட ஆட்சியாளராக ரவி கடமை புரிந்தான். அவனே அக் குழுக்கு தலைமை தாங்கி உணவு, உடை, உதவித் தொகை வழங்கிக் கொண்டிருந்தான்.

உதவித் தொகையை பெறுவதற்கு வரிசையில் நின்றபோர் தன் தம்பியைப் பார்த்துத் திகைத்து விட்டான். கோபுவோ தன் தம்பியின் முன் கையெழுத்துப் போடக் கூடத் தெரியாமல் விரலை பதித்து உதவிப் பொருட்களை பெறுவதும் கண்டு தாங்கவில்லை. இளமையில் கல்வி கற்காமையை எண்ணி பலமுறைகளில் மனம் வருந்தினான். பணத்தை எல்லாம் இழந்ததற்கு, கல்வியறிவு இல்லாமையே காரணம் என்பதை உணர்ந்து முதியோர் கல்விக் கூடத்தில் சேர்ந்தான். கல்வி அறிவு பெற வயது தடையில்லை என்று கல்வி கற்கத் தொடங்கினான்.

M. சுகந்தினி
4150 KREFELD



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3வது வினாவிடைப் போட்டி முடிவு

1 - திருகோணமலை

2 - ஔவையார்

3 - ஸ்பானியா (பார்சிலோனா) 1992

4 - பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்.

5 - சீமெந்து - காங்கேசன்துறை
உப்பு - ஆனையிறவு
இரசாயனப் பொருள் - பரந்தன்
கடதாசி - வாழைச்சேனை.

ஐந் விடைகளும் சரியாக எழுதியவர்கள்:-

செல்வி - பிங்கலை - கிறேஜோஸ்வரன் - ELSDORF

செல்வி - வாணி - வைத்தீஸ்வரன் - MÖNCHENGLADBACH

செல்வி - சர்மிளா - வரதராசா - DUISBURG

செல்வி - தர்சிகா - கந்தவேள் - KREFELD

செல்வன் - சுபாகர் - சிறிபாலன் - REMSCHEID

செல்வன் - ராஜ்மோகன் - நந்தன் - DUISBURG

செல்வன் - ஜெயன் - சிறிதரன் - STUTTGART

செல்வி - சாந்தா - பாலேந்திரம் - ETTLINGEN

செல்வி - சிந்து - குலசிங்கம் - DORTMUND

www.tamilarangam.net

4 விடைகள் சரியாக எழுதியவர்கள் :-

செல்வன் - விஜிதரன் - கமலநாதன் - SOLINGEN
" - மகேந்திரம் - M - "
" - சுதன் - ஜெயவேந்திரம் - "
" - சிவமோகர் - சிவசுப்பிரமணியம் - SELM
செல்வி - தர்சினி - கமலநாதன் - SOLINGEN
" - கபிலினி - ஜெயவேந்திரம் - "
" - லேகா - செல்வராசா - "
செல்வன் - ராஜாராம் - சந்திரசேகரம் - DUISBURG.
" - உதயன் - செல்வராசா - SOLINGEN
செல்வி - சிவாஜினி - செல்வராசா - "

இவர்களுக்கு எங்கள் பாராட்டுகள். இவர்களில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்பட்டு "பாப்பாவுக்குக் கதைகள்" என்னும் சிறுவர் நூலைப் பரிசாக பெறுபவர்.

செல்வி - வாணி - வைத்தீஸ்வரன்

MÖNCHENGLADBACH.

இப்பரிசை அன்பளிப்புச் செய்பவர் DUISBURG நகரைச் சேர்ந்த செல்வன். S. ஜெயராஜேந்திரன். இவருக்கும் எங்கள் பாராட்டுக்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வினாவிடைப் போட்டி - 4

1 - இலங்கையில் வாழும் இனத்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

2 - திருக்குறள் எழுதியவரின் பெயரைக் குறிப்பிடுக.

3 - தமிழர் ஒருவர் ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருடைய பெயர் என்ன? எந்த நாடு?

4 - ஜேர்மனியில் உங்களுக்குத் தெரிந்த பெரிய நகரங்கள் 5ன் பெயரைக் குறிப்பிடவும்.

5 - வட மாகாணத்தில் கீழ்க் குறிப்பிடுபவை விளையும் ஒவ்வொரு இடங்களையும் குறிப்பிடவும்.

நெல் –

புகையிலை –

வாழை :–

காய்கறி :–

பணம் பொருள் :–

முடிவுதிகதி - 15-4-91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

AMALA ANNAI ANPAHAM
(CHILDREN'S HOME)
அமல அன்னை அன்பகம்

# அனாதைச்சிறுவர்களை அரவணைக்கும் அன்பகம்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பர். களங்கமற்ற இவ் அரும்புகளை நல்ல முறையில் வளர்த்து மலர வைப்பது இச் சமுதாயத்தின் தேவையன்றோ. ஆலயங்களில் பெருந்தொகைப் பணத்தை காணிக்கையாகச் செலுத்தி வழிபடுவோர் பலர். ஆனால் இவர்கள் மனுக்குலத்துக்கு சேவை செய்ய மட்டும் ஏனோ பின் நிற்கின்றார்கள்.

அவ்வாறு வன்செயலால் தாய்தந்தையரை இழந்த தவிக்கும் சிறுவர்களுக்கு மறுவாழ்வளிக்க ஏற்படுத்தப்பட்டதே அமல அன்னை அன்பகம்.

19-01-1986 இல் யாழ். பழைய பூங்கா வீதியிலுள்ள இல்லமொன்றில் தொடங்கப்பட்டது. உதவிக் கரங்களின் ஒத்துழைப்பால், இன்று அரியாலையில் சொந்தக் கட்டிடத்தில் அன்பகம் இயங்குகின்றது.

இங்குள்ள சில நல் உள்ளங்களின் உதவியும், வெளிநாட்டில் உள்ள சில நண்பர்களின் உதவியும், உள்ளூர் அமைப்புக்கள் சிலவற்றின் உதவியும் பெறப்படுகின்றது. குறிப்பாக திருச்சிலுவை கன்னியர்மட வைத்தியசாலையின் நடமாடும் வைத்திய சேவையையும், [illegible] நிறுவனத்தின் சில உதவிகளும் அடங்கும்.

கடந்த வருட ஆரம்பத்தில் வன்செயலுக்கு இலக்காகி மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவன் க. சத்தியேந்திரா. இவரது முதலாம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு மருத்துவபீட நண்பர்களால் அண்மையில் அமல அன்னை அன்பகத்திற்கு தாங்கியுடன் கூடிய தொட்டி ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது.

தமது நண்பனின் நினைவாக வித்தியாசமான முறையிலே உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவர்களைச் செயற்பட வைத்தது.

இயற்கை அழகுமிக்க அரியாலையில் அமைந்துள்ள இவ் அன்பகத்திலே எல்லாமே ஒழுங்காக நடக்கின்றன. காலை 5 மணிக்கு பிள்ளைகள் எழும்புகின்றார்கள். காலைக் கடன்களை முடித்த பின் [illegible] வெளிகளில் எல்லோரும் சேர்ந்து உடற்பயிற்சி செய்கிறார்கள். பின்பு படிப்பு. சாப்பிட்டு முடித்த பின் 7.30 மணிக்கு "வான்" வர எல்லோரும் பாடசாலை செல்கிறார்கள்.

President :
Mr. C. R. Joseph, J.

Vice-Presidents :
Rev. Sr. Sophia, H. F.
Mrs. Rajan Mangala

Secretaries :
Rev. Fr. Vincent Patri
O.
Mr. S. Joseph Bala



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வன்செயலால் தாய் தந்தையரை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க ஏற்படுத்தப்பட்டதே அமல அன்னை அன்பகம்.**

பாடசாலை முடிந்தவுடன் பிற்பகல் 2.00 மணிக்கு வாகனில் ஏறி 2.30 க்கெல்லாம் அன்பகத்திற்கு வந்து விடுகிறார்கள். வந்தவுடன் மதிய உணவு. உண்டதன் பின் சிறியவர்கள் சிலர் உண்டகளைப் புத்தீர உறங்க, சிலர் விளையாடச் சென்று விட, பெரிய மாணவர்கள் படிக்கிறார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அவ்வப்போது வந்து இவ் அநாதைச் சிறுவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதையும் அவதானிக்க முடிந்தது. மாலை முழுவதும் விளையாட்டு. அந்தி மாலையானவுடன் முகம், கை, கால் கழுவி தேநீர் அருந்தி விட்டு படிப்பு. படித்து முடித்த பின் உணவு அருந்தி விட்டு படுக்கைக்கு செல்கிறார்கள். இவ் அநாதை இல்லத்தின் ஒரு நாள் வாழ்க்கை இவ்வாறு தான் அமைகிறது.

அமல அன்னை அன்பக நிர்வாகச் செயலாளர் அருட்திரு. வில்சன் பற்றிக்கைச் சந்தித்த போது:–

"இவ் இல்லத்திலே தற்போது 52 சிறுவர்களை பராமரித்து வருகிறோம். அதை 60 ஆக உயர்த்த எண்ணியுள்ளோம். இடவசதி மற்றும் பொருளாதார நெருக்கடிகளினால் மேலும் கூடிய சிறார்களுக்கு உதவிக் கரங்களை நீட்ட முடியாதுள்ளது" என்றார்.

இனக் கலவரங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களால் திடீரென அநாதைகளாக்கப்பட்ட இச்சிறுவர்கள், உறவினர்களால் பராமரிக்கப்படும்போது பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் அனாதரவான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

ஆனால் இவ் அன்பகத்தில் ஒரு குழந்தை எவ்வாறு பெற்றோரால் பராமரிக்கப்படுகிறதோ, அவ்வாறே பராமரிக்கப்படுகிறான். கல்வியில் ஆர்வமுள்ளோருக்கு உயர் கல்வி அளிக்கவும், ஏனையோருக்கு தொழில் நுட்பக் கல்வி புகட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நோயுற்றவருக்குத் தான் வைத்தியம் தேவை. ஆம் இச் சிறுவர்கள் எதிர்பார்ப்பது அன்பையே. எனவே உங்கள் கரங்களை இவர்களை நோக்கி நீட்டுங்கள். இவ்வநாதைச் சிறுவர்கள் எதிர்காலம் ஒளிமயமாகிட உதவுங்கள்.

Treasurer :
Mr. A. J. Kulasingham

Committee Members :
Mr. S. A. Paul
Mr. T. M. Antonipillai
Attorney – At – L
Mr. R. Alphonses
Mr. R. Rajadurai
Mr. I. Gnanaseelan
Mr. J. Osman
Mr. J. O. L. Richway

Medical Consultant :
Dr. A. L. Abraham,
M. B, B, S. (Cey.)

"Whatsoever you do to the least of my bretheren that you do unto me" (Mt.25/40)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிதி உதவி

தாயகத்தில் யாழ் அரியாலை அமல அன்னை இல்லத்தின் செயற்பாடுகள் தேவைகள் விபரங்களை 12, 13, பக்கத்தில் காண்கிறீர்கள் வெளிநாடுகளில் வாழும் நாம் சிறு தொகைப்பண உதவி புரிந்து அந்த அனாதைச் சிறார்களின் நலனில் அக்கறை கொள்வதன் மூலம் ஏதோ நாம் செய்யும் மனிதாபிமான சேவையாகும்.

எனவே உங்களால் இயன்றபண உதவி புரியுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். சேகரிக்கும் பணம், அனுப்பப்படும் விபரங்கள் யாவும் எமது சஞ்சிகையில் வெளியிடப்படும்.

வங்கி கணக்கு இல:- 320029952

B.Z. NO:- 35050000

STADTPARKASSE. DUISBURG.

## வாசகர்கட்கு

எமது வெளியீட்டை இலவசமாகவும் 60 பெனிக் முத்திரைகளை அனுப்பி மாதாந்தம் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் ஒவ்வொருமாதமும் அனுப்புவது சிரமமும் பணச் செலவுமாகும். எனவே ஒரேதடவையில் 12 முத்திரைகளை அனுப்பினால் நாம் ஒரு வருடத்திற்கு சஞ்சிகைகளை அனுப்புவோம். உங்களுடைய முத்திரைகளுடன் விலாசத்துடன். நாம் இணைத்துள்ள கடிதத்தில் அனுப்புவது இலகுவாகும். ஒரு சிலர் அதைக் கவனிக்காத காரணத்தால் சஞ்சிகை அனுப்புவதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. பெயர், விலாசங்களில் மாற்றம் ஏற்படின் எமக்கு அறியத்தருவது நன்று. எனவே இவ் இடையூறுகளை கவனித்துக் கொள்ள நம்புகிறோம்.

# போலி நட்பு

ஊரார் போற்ற உற்றார்
சுற்றம் போற்ற
நன்மை செய்து
நல்லவர் போல் நடித்து
நாற்றிசையும் படைத்த
நாயகன் இவன்தானோ?
ஆ... அநியாயமே கேளீரோ
இவன் கதையை....
பாசத்தைக் கொட்டி
பால் வார்த்த பண்பாளன்
உற்றார்.. பலபேருடன்
பழகிவிட்டு இன்று
பாதை மாறியது ஏனோ?...
தன் தங்கை வாழ்க்கை
நாசம் கெட்டுப் போன போது
தட்டிக் கேட்டான் நாகம்...
கெட்ட நடையனிவன்
இன்று சொத்துக்கும்
பணத்துக்கும் பாதை மாறியது ஏனோ?
இவர் கற்புக்கு விலைகேட்கும் காமுகன்
இவன்தானோ.....
ஊர் சொன்னதுவைத்து
புறங்கூறும் புழுக்கர்களோ - என்றெண்ணினால்
பொறுமை என்று நினைத்தீர்களா?
இன்று மாற்றானை மயக்கி மாளிகையை அபகரிக்க
சொத்தையும் சுகத்தையும்,
அனுபவிக்க, சிங்கம் தேடிச் சென்றுவிட்டான்.
பொன்னான இவர் வாழ்க்கை
இவன் பறித்த போலிநட்பு.....

ம- சிவம்
4018, LANGENFELD

# உறவைத் தேடி (தொடர்கதை)

(ஆ.... நான் இந்தியப் பெண் இல்லை.. ஜேர்மன் பெண்தான் எனது கணவர் இலங்கையர்... பெயர் யாதவன்... யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி என்று கூறி தனது வரலாற்றை மேலோட்டமாகக் கூறி முற்றுப்புள்ளி வைத்தாள்.)

இளமாறனும் மனைவியும் சந்தோசப்பட்டனர். அவளுக்கு தமது அன்பையும், மனதில் பொங்கிய மகிழ்ச்சியையும், எப்படித் தெரிவிப்பது என்று திண்டாடினர். பார்வைக்கு அழகான தமிழ்ப் பெண் போன்ற தோற்றம், அவளின் நடபடிக்கைகளை கவனித்த இளமாறன், தன்மனதில்.. இவளது கணவன் அதிஷ்டசாலி என்று தன் மனதில் எண்ணிக் கொண்டான். வெளிநாட்டவர் காரியாலயத்தில் அந்நிய பாஷையின் மத்தியிலே, தமிழின் இனிய நாதம் கேட்கும் வாய்ப்பினைப் பார்த்து மிகவும் சந்தோசப்பட்டனர். இனி எம்பிள்ளைகளுக்கு இங்கு பிரச்சனை இல்லை... என்று மனதில் பலவாறாக எண்ணினர்.

அன்னையா... அவர்களது கோலத்தைப் புரிந்தவள் பார்த்து.. இல பல கேள்விகளைத் தமிழிலேயே கேட்டாள். அவர்கள் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடின்றி தமிழிலே விடையளித்தனர். நமக்கு இங்கு





www.tamilarangam.net

www.tamilarangam.net

ஏற்பட்ட பிரச்சினைகளையும், நமக்கு வீட்டு வசதி போது-மானதாக இருக்கவில்லை. இரண்டு சிறிய அறைகள் தான் தந்தார்கள். அதிலே படுக்கையும், சமையலும் அடங்கும்.. பிள்ளைகள் இருவர் எமக்கு இருக்கின்றனர். இதனோடு நாம் வீட்டை மாற்றித் தருமாறு கேட்டபோதும் மாற்றித்தருவோம் என்கிறார்கள்... இந்த வருடத்துடன் மூன்று வருடங்களாகி விட்டன... பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் படிப்-பித்தால் ஊருக்குப் போகும் போது உதவியாக இருக்கும் என்றும் நினைத்தோம். ஆங்கிலக்கல்வி இங்கு இல்லை.. எல்லாவற்றையும் நினைத்து, நண்பர்களிடம் கைமாறி, எம்மிடம் தொழில் காசில் மிச்சம் பிடித்ததையும் சேர்த்துக் கொண்டு தான் வாங்கிவிட்டோம், என்று தமது உண்மை நிலையினைக் கூறினார்.

இவர்களின் கூற்றுக்களை கூறிவைத்துவிட்டு நீங்கள் என்ன காரணம் சொன்னாலும்.. இந்த நாட்டில் தஞ்சம் பெற்றுக் கொண்டு.. இன்னொரு நாட்டிற்குத் தஞ்சம் கோரிப்போவது இங்கு சட்டத்திட்டங்களின்படி ஏற்றுக் கொள்ளமுடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்று கூறிக்கொண்டு அவர்களை நோக்கி, இந்த இரண்டு பந்தில்
களிலும், உதிரிப் பெட்டிகள் வையுங்கள். என்கின்றாள். இனிமேல் இப்படி
சண்டைக் கூடாது.. இவை எல்லாம் உங்களுக்கும்
பெரிய சிக்கல்களைத் தோற்றுவிக்கும். உங்களுக்
கும் வேலைகளை அதிகரிக்கச் செய்யும். இப்போ
நீங்கள் போகலாம். நான் உங்கள் காரணங்களை
மேலிடத்திற்கு எடுத்துக் கூறி அவற்றை நீக்கி
விடுகிறேன். உங்களுக்கு சரியான விடுதலையும்
பெற்றுத் தருவதற்கான முயற்சிகளையும்
மேற்கொள்கிறேன். இப்போது பழைய
விட்டபடியே போய் இருங்கள்.. உங்கள்
வங்கிக்கு பணத்தையும் அனுப்பிவைப்பதற்கு
ஆவன செய்வேன் என்று கூறி.. அவர்களை
அனுப்பி வைத்தாள்.. மீனில் யாதவன்...



நீலாவின் பேச்சில், சாதாரண வார்த்தைகளிலும் தம்மை
பறிகொடுத்த சிவபாலன் தம்பதியினர். உண்மையிலேயே...
பெரிய திருப்தியும், பெருமையும் அடைந்தனர். நாம் இப்போது இந்-
நாட்டுக்கு அந்நியர் அல்ல.... என்ற ஒரு உணர்வு அவர்களைப் பொறுத்தில்
பெற்றனர். அந்நாட்டில் அவ்வாறு வலைத்தில் நடமாடிய தமிழின் தாண்டவம்
பெரும் பங்கைக் கொடுத்தது.

சிவபாலன் தம்பதியினர் உடனே தமது
நண்பன் வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடையத்தைச்
சொன்னார்கள். தொடர்ந்து இந்த விடையம். தமிழர் தம் மனைகளில்-
லாம். தொலைபேசியில் பரவியது. தமிழ் பேசும் மங்கை நீலா—யாதவன்
என்ற பெயர்களும், பேச்சுக்களும் அடிபட்டு ஒலித்தன. தமிழர்களுக்கு
மட்டற்ற உற்சாகம் பிறந்தது போலவும் தமக்கு ஏதோ.. பெருமை
கிடைத்தது போலவும்... அன்றைய நாள்.. ஆச்சரியத்தையும், ..
ஆனந்தத்தையும் சுமந்து கொண்டு கழிந்தது...

— முற்றும்

விக்னா - பாக்கியநாதன்.
4600, DORTMUND

www.tamilarangam.net

# செய்தித்துளிகள்

19.2.91 * மன்னார் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 45 இராணுவத்தினர் பலியாகினர்.

20.2.91 * வடகிழக்கில் இலங்கை அரசின் விமானக் குண்டுவீச்சு குறித்து இந்திய அரசு அபயாரம் தெரிவித்துள்ளது.

22.2.91 * இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்வாக்கெடுப்பதில் பல எம்.பிகள் அடி உதை. சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

25.2.91 * மாலைதீவு சிறையிலிருந்த 33 பேரையும் விடுவிக்கும்படி புளொட் இயக்கம் இலங்கை அரசைக் கோரியுள்ளது.

26.2.91 * அம்பாறை மாவட்டத்தில் 22 தமிழர்கள் கடத்தப்பட்டதுடன் 4பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

2.3.91 * கடந்த ஜூன் மாதத்தின் பின் வடகிழக்கில் 7500 பேர் குறித்து தகவல் இல்லையென மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யோசப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2.3.91 * வடகிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும்படி 6 தமிழ் கட்சிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

www.tamilarangam.net

3.3.91 * கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா உட்பட 24 பேர் கொல்லப்பட்டனர். புதிய அமைச்சராக பிரதமர் விஜயதுங்கா பதவியேற்றுள்ளார்.

9.3.91 * பாதுகாப்பு அமைச்சர் கொலை தொடர்பாக நூறுபேர் கைதாகி பின்னர் 10 பேர் விசாரணையின் பின் விடுதலையாகினார்கள்.

11.3.91 * எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஐ.தே.கட்சியும் இ.தொ. காங்கிரசும் கூட்டாக போட்டியிடவுள்ளன.

" * மட்டக்களப்பில் மருந்து இன்றி பல நோயாளர் மரணமடைகின்றனர்.

" * திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் பல வேறு தாக்குதல்களில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

" * வவுனியாவில் – புலிகள் – புளொட் மோதலில் 3 புளொட் உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளனர்.

" * இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அரசியல் தீர்வு காணும்படி. ஜ.தே.ஐ.மு. முன்னணி அரசை கோரியுள்ளது.

12.3.91 * யாழ் கோட்டைப் பகுதியில் இருந்தோர் விமானத்தாக்குதலில் 28 பேர் பலியாகியுள்ளனர்.

21.2.91 * அமெரிக்காவின் சுதந்திரப் பதக்கம் முன்னாள் பிரிட்டன் பிரதமர் மார்கிரட் தட்சருக்கு கிடைக்கவிருக்கின்றது.

26.2.91 * குவைத்தை மீண்டும் கட்டியெழுப்ப 40 ஆயிரம் கோடி டாலர் தேவைப்படுமென அந்நாட்டு அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.3.91 * 1,75,000 ஈராக்கிய வீரர்கள் நேசநாட்டுப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர் என அமெரிக்க செய்தி கூறியுள்ளது.

* அனைத்து வெற்றிக்கு எந்த ஒருவரும் உரிமை கொண்டாட முடியாது என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

4.3.91 * 7 வாரகால ஆக்கிரமிப்பில் 33 ஆயிரம் குவைத்தியர், 85 ஆயிரம் ஈராக்கியர் பலியாகியுள்ளனர்.

* குவைத்தில் 500க்கு மேற்பட்ட எண்ணெய் கிணறுகள் தொடர்ந்து எரிகின்றன.

5.3.91 * பங்களாதேஷின் புதிய பிரதமராக காலிதா ஸியா பதவி ஏற்றுள்ளார்.

* பாலஸ்தீன அரசொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று பிரான்ஸ் ஜனாதிபதி கோரிக்கை விட்டுள்ளார்.

6.3.91 * ஈராக்கின் சில மாநிலங்களில் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 500க்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

" * இந்திய அரசு கலைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு + தமிழ்நாடு மாநில அரசு தேர்தல்கள் விரைவில் நடைபெறவுள்ளன.

9.3.91 * இந்திய காஷ்மீரில் பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் 50 பிரயாணிகள் உயிரிழந்துள்ளனர்.

14.3.91 * சோவியத்தில் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

" * செக்கோஸ்லோவாக்கியாவில் பிரிவினை கோரி பல்லாயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர்.

www.tamilarangam.net

# சீதனப் போர்

சீதனம் என்ற போர் தொடுத்து
சீவியத்தை வீணாக்கும்
சீவன்களே இருக்கிறார்கள் - எங்கள்
சீதேவிகளை ஏற்றிடுங்கள்!

சீர் வரிசை கொடுமையாம்
சீமான்களின் தேவையாம்
சீலத்தில் உயர்ந்த தெங்கே
சீர் கெட்ட சமுதாயமே!

சீதையாக இருந்தாலும்
சீதனம் தான் தேவையாம்
சீலனை நினைக்கவில்லை
சீட்டையும் பார்க்கவில்லை!

சீராக வாழ்பவரை
சீமை மதிக்கவில்லை
சீர் வாழ்க்கை பார்க்கவில்லை
சீதனங்கள் தேவையதால்!

சீர்மைகள் பார்க்கவில்லை
சீ என்றும் வெறுக்கவில்லை
சீவியத்தை உயர்த்திவைக்க
சீதனங்கள் முக்கியமாம்!

சீமான்கள் உயர்வுக்கு
சீதேவிகள் சீதனமாம்
சீர் கெட்ட சமுதாயமே
சீராக வாழ்வதெப்போ!

யாழ் நகரிலிருந்து
செல்விகள் ஜெயந்தா, செல்வி

www.tamilarangam.net

("மண்" சஞ்சிகையின் இரண்டு ஆண்டு நிறைவையொட்டி மாணவர்களிடையே நடைபெற்ற கவிதைப் போட்டியில் 2வது இடம் பெற்ற கவிதை)

# ஈழம் இன்று இரத்தத்திலே

ஈழம் இன்று இரத்தத்திலே
உரிமை மீட்கும் யுத்தத்திலே
பாரும் இன்று போர் நாதத்திலே
பாதி உயிர்கள் ஆபத்திலே
நோயும் பசியும் வாட்டிடவே - நாம்
நொந்து மடிந்தோம் வாழ்க்கையிலே
யாவும் இழந்து தெருவினிலே
வாடுகின்றோம் மர நிழலினிலே
ஒற்றை ஆட்சி ஆசையினிலே - நாம்
சிக்குப்படும் இந் நாட்களிலே
வெட்டி வீழ்த்தினர் வீதியிலே - எம்மை
வேகக் கொன்றனர் தீயினிலே
சொந்த அகங்களை அழித்ததிலே
சொந்தங்களை இழந்ததிலே
கொலை வெறிக் கொண்டோர்கள்
கொடுமையிலே நாம்.
அகதிகளானோம் எம் மண்ணிலேயே
பட்ட துன்பங்களை நினைக்கையிலே
பசு நிகர் வாழ்வினில் அர்த்தமில்லை
வேதனை எல்லை மீறுகையில்
வேட்கையடைந்தோம் விடுதலையில்.

www.tamilarangam.net

சுதந்திரம் காணப் போரினிலே
இரத்தமானோரம் நேரினிலே
கலந்திடலாம் உயிர் காற்றினிலே
வீரர்களாய் போர் களத்தினிலே
மலர்ந்திடும் ஈழத்தின் வரவினிலே - எம்
மனதுகள் ஒன்றும் பெரிதல்லவே.....

திருமதி - ஜெ - இராஜரட்ணம்.
6620 VÖLKLINGEN

# குறுக்கெழுத்துப் போட்டி 14

முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | 2 ற் | 3 று | 4 மை | 5 X | 6 ப | 7 தி |
| 8 ட் | 9 X | 10 ளி | 11 வ | 12 X | 13 க | 14 ல |
| 15 கு | 16 ட் | 17 க | 18 X | 19 அ | 20 டை | 21 ப் |
| 22 க் | 23 ம | 24 X | 25 க | 26 கு | 27 X | 28 ப |
| 29 தெ | 30 ட | 31 ய | 32 X | 33 ந் | 34 ச | 35 தி |
| 36 உ | 37 ம் | 38 ம் | 39 X | 40 த | 41 ர | 42 கா |
| 43 ட | 44 X | 45 ப | 46 தீ | 47 தி | 48 ம் | 49 ர |

சரியாக விடை எழுதியவர்கள் :-

க - பிரசாந்தி HILDESHEIM
A. பாலேந்திரம் ETTLINGEN
S. பவானி DORTMUND
K. செல்வராசா KREFELD
அருளியா-கருணாநிதி BARSINGHAUSEN
S. அரவிந்தன் DUISBURG

அதிர்ஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டு 20,DM பெறுபவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி 15

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 X |
| 15 | 16 | 17 | 18 | 19 X | 20 | 21 |
| 22 | 23 X | 24 | 25 | 26 | 27 X | 28 |
| 29 | 30 | 31 X | 32 X | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 X | 40 | 41 X | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

## இடமிருந்து வலம்:-

1- இந்து சமுத்திரப் பகுதியில் ஒரு தீவு

8- எம் மக்களின் வாழ்வு இப்படியாகவிருக்கின்றது

15- தேங்காயின் ஒரு பகுதி (கு)

24- கடினம் என்று பொருள்படும் (கு)

29- விளையாட்டுத் தேவையானதொன்று (வ.இ.க.எ.வி)

33- மீன் வகைகளில் ஒன்று (கு)

36- ஏமாளி என்றும் கூறலாம்.

www.tamilarangam.net

மேலிருந்து கீழாக:-

1- துரைப்பண்டப் பிரிவுகளில் ஒன்று.

4- "கௌரவ" என்றும் பொருள்படும்.

5- இதனால் வாழ்க்கையை முடித்தவர்களுமுண்டு (கீ.மே. மன்.ஏ.வி)

6- மங்கள காரியங்களில் இதற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் (கு)

27- சௌக்கியம் (கு)

26- இவர் இறந்தும் பணத்தைத் வைத்திருப்பார் (க.ஏ.வி)

30- நோய் ஒன்று. (கீ.இறந்த.ஏ.வி)

38- இலங்கையில் ஒரு நகரம் (கீ.மே)

முடிவு திகதி - 20.4.91

# அரசியல் வாதிகள்

அரசியல் வாதிகள் நடாத்தும் நாடகம் உலகில் எங்கும்
— நடக்கிறது!
இரவினில் கூட தூக்கமின்றி பசியால் குழந்தைகள்
— துடிக்கின்றது!
கவச உடைக்குள் தம்மை நுழைத்த தலைவர்கள் உயிரை
— காத்திடுவர்
பதுங்கு குழிகள் வெட்டிய மக்கள் புதைகுழியாக
— மாற்றிடுவார்!
சட்டத்தை மிதித்து தலைவர்கள் இங்கே நாட்டத்தில்
— லாபம் பெற்றிடுவார்
திட்டங்கள் இல்லா ஏழைமக்கள் சட்டத்தினால் வாழ்வை
— முடித்திடுவார்.....

பரதன்
4330, MÜLHEIM


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அர்த்தமுள்ள வெளிநாடு

(தொடர் அங்கம்)

## பாகம் 1 - ஆர்வம் -

ஆசைக்கும் ஆர்வத்திற்கும் அதிகமாக வேறுபாடு இல்லை. ஒன்றை அடைய வேண்டும். அநுபவிக்க வேண்டும்! என்றால் அது ஆசை. அந்த ஒன்று என்ன வென்று அறிய செயல்வது ஆர்வம்.

ஆர்வம் எல்லோருக்கும் உண்டு. ஆர்வம் இல்லாதவன் [illegible]த்தைப் பற்றி அக்கறை இல்லாதவன். அறிவு வளர்ச்சிக்கு ஆர்வம் இன்றியமையாதது. எதற்கும் ஆர்வம் அளவோடு அமைய வேண்டும். நியாய மானதாக அமைய வேண்டும். ஆர்வப்பட்டால் மட்டும் போதாது. அதை எவ்வாறு நிறைவேற்றுவது. என்பதை சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

காலப் போராட்டத்திலிருந்து 1984, 1985 காலப்பகுதிகளை ஆராய்ந்து எடுத்துப் பாருங்கள். எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கிழக்கு பெர்லின் விமான நிலையத்தில், பலங்க பலங்க விழித்துக் கொண்டிருந்தனர். எப்படி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிந்தவர்களை அழைப்பது எவ்வாறு காசு மாற்றுவது போன்ற விடயங்கள் எதுவுமே பலருக்குத் தெரியவில்லை.

மேற்கு ஜேர்மனியில் வெள்ளைக் காரிகளுடன் கை கோர்த்து உலாவலாம்; நான் வேலை தருகிறேன்! நீ வேலை தருகிறேன்! என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளிகள் வரிசையில் நாளில் காத்திருப்பார்கள் — வெளிநாட்டைப் பற்றின் ஜொலிப்பாக ஜேர்மனியைப் பற்றி இலங்கையில் உலாவிய வதந்தியால், நடைமுறைச் சாத்தியங்கள் பற்றி ஆராயாமல் வெளிநாட்டு ஆர்வம் காரணமாக வந்தோரே பலர்...

இலங்கையிலிருந்து இங்கு பெர்லினுக்குப் புறப்பட்ட விமானத்தில் இருந்த ராஜ் தேவனைக் கேட்டான்... "83 ஆண்டு இனக்கலவரத்தினை தொடர்ந்து பின்னர் இருந்து அகதியாகத்தானே பார்ப்பாரும் வந்தனர்?!.. பல இன்று மௌனமாய் ராஜ்.. தன்னை அவமானப் படுத்திய உணர்வில் தேவனின் முகம் சிவந்தது. அங்கே அமர்ந்திருந்தவர்கள் நட்டமாக தேவனைப் பார்த்து என்னமோ உண்மைதான். ஆனால் எல்லோருமே அகதியாக வரத்தான் ஜேர்மனிக்குப் போகிறோம். ஏன் அறிந்திருக்க இல்லை. பணம் சேர்க்க, அகதியாக, இருப்பதைத் தாய்ப்பாற்ற, சீதனம் கொடுக்க... இப்படிப்பல தொலைந்திருந்தது.

இப்படி வேலை கிடைக்கும் வீடு கிடைக்கும், பணமும் கிடைக்கும், என்ற கேள்விகளை எழவிடாமல் தடுத்தது. வெளிநாடு செல்லவேண்டும் என்ற ஆர்வம். அறியாமையால் விளைந்த ஆர்வத்துடன் ஜேர்மன் மண்ணை மிதித்தவர்கள் பலவித ஏமாற்றங்களுக்கு ஆளாகி வெளிநாட்டிலிருந்து வெறுமையுடன் திரும்பிச் சென்றார் உற்றம், சுற்றத்தவர் ஏதேனும் செய்வார்களோ என்ற நினைப்பில் தங்கியோரும், நாடுவிட்டு நாடாக. நாடோடியாய் அலைபவர்களுமே அதிகம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகரம் விட்டு நகரம் செல்ல முடியாமல் ஒளிப் பிட்ட இல்லை காரர், ஒளிப்பிட்ட காலம் வரை வேலை செய்யக்கூடாது என்ற நிலையுடன் அறிந்தவர்களை... தெரிந்தவர்களை சந்திக்க முடியாத நிர்ப்பந்தங்களுடன், என்ன செய்வது வெளிநாடு என்று மொழியின் தெரியாமல் வந்து- விட்டோம், நாடு காத்து சேர்த்துக் கொண்டு தாயகம் போவோம்" எனத் தங்களைத் தாங்கள் தேற்றி வாழ்ந்தோரே அநேகம்.

இப்படி வாழ ஆரம்பித்தவர்கள் அன்று முடிவேயாகத் தெரிந்த தாயகப் பிரச்சனைகள் இன்று தொடராக மாறியதாலும் வெளிநாட்டு வாழ்க்கைக்கு தங்களைப் பழக்கிப் படுத்திக் கொண்டதாலும், சில, கட்டுப்பாடுகள் தடை உத்தரவுகள். காலப் போக்கில் நீங்கியதாலும் தொடர்ந்து இங்கே தங்க நினைப்பதை இன்று பார்க்கிறோம்.

1984, 1985 களில் பலர் இங்கு வருவதற்கு நாட்டுப் பிரச்சனை காரணமாக இருக்க- வில்லை. வெளிநாட்டுக் கவர்ச்சியே பிரதான காரணமாகும். இந்தக் கவர்ச்சியை விதைத்தவர்களில் பெரும்பாலானோர் 1980, 1981 களில் வெளிநாட்டிற்கு வந்தவர்களே. இவர்கள் விதம் விதமான உடைகள் அணிந்து பல விதமான கோணங்- களில் படங்களை நாட்டிலுள்ளவர்- களிற்கு அனுப்பி அங்குள்ளவர்களின் ஆர்வத்திற்கு தூண்டு கோலாகினர்.

வெளிநாட்டில் அகதிகளாக வாழ்வதைப் பற்றியோ, உடலை வருத்தி கூலி வேலை செய்வதைப் பற்றியோ எழுதினால் இவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சனம் செலவு செய்வார்கள் என்ற தாழ்வு மனப்பான்மை யில் தம் நிலையை மறைத்து விட்டதே பலரின் வெளிநாட்டு வருகைக்கு காரணமானது என்றால் தப்பில்லை.

ரவீந்திரனுடைய உறவினர் மோகன் வெளிநாட்டவர் அலுவலகத்திற்கு வந்திருந்தான் போர்க்கால வருடங்களுக்கு முன்பே ஜேர்மனிக்கு வந்து விட்டான். மோகன்தான் "ஜேர்மனிக்கு வந்தால் சுகமாக வாழலாம்" என்ற ஆர்வத்தை ரவியின் மனதில் விதைத்தவன்

"மோகா! அட்வான்ஸ் லெவல் சேர்டிபிக்-கட், பள்ளிக்கூட நற்சான்றிதழ் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். எங்கையாவது ஒரு கொம்பனி யிலை "கிளார்க்" வேலை எடுத்துத் தருவியா?"

"ரவி விசயம் விளங்காமல் கதையாதை. இந்த நாட்டு மொழியிலை படிச்சால் தான் கொம்-பனிகளில் வேலை செய்யலாம். இங்கே எங்கடை படிப்புக்கு வேலை இல்லை. கூலி வேலை தான். கூலி வேலை செய்தாலும் எங்கடை ஊர் மாதிரி கீழ்த்தரமாய் நினைக்க மாட்டினம்" -- "அப்ப ஜேர்மன்காரரிலும் கூலியாட்கள் இருக்கினமே" வெளிநாட்டவர்கள் தான் நிறையப் பேர். நாங்கள் செய்கிற வேலைகளை ஜேர்மன்காரர் விரும்பமாட்டினம்... ஆனால்... அவை எங்கடை வேலையை கீழ்த்தரமாய் நினைக்க மாட்டினம்....

இப்படியே புழுகிக் கொள்வோர் பெரிய பெரிய நாடுகளுக்கேற் தங்களை உயர்வாக எண்ணி வெளிநாட்டில் வாழ்ந்தது போக தேவர்களோ அல்ல. வெளிநாடு, வெளிநாடு, என்று வந்தவர்களுக்கு "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்ற பொருளை கிடைத்தது என்பதே உண்மை.

(உதயபாரதம் அடுத்த இதழில்)

ராஜன் - முருகவேல்
4018, LANGENFELD

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உணர்வற்ற உள்ளங்கள்

அடிமைகள்... அவலங்கள்... அலங்கோலங்கள்
இவற்றை எங்கள் மீது திணிப்பதற்காக
எதிரி கொண்ட நடவடிக்கைகள் தான்
எத்தனை... எத்தனை..
பொழிந்தது அன்று மழை கொடியது
விதவிதமான ஷெல்கள்
பெருகிய இரத்தாறுகளில் மிதந்தன
பிணக் குவியல்
தகர்க்கப்பட்டன வீடுகள் பெருகியது
எண்ணற்ற அகதிமுகாம்கள்
சொந்தமண்ணில் தொடர்கிறது
அடிமைகள்... அவலங்கள்
பொருளாதாரத் தடையாம் புரிந்தோம்
எதிரியின் வெறித்தன்மையையும்
தமிழ் மக்கள் மீது திணித்துள்ள
ஆதிக்க வெறியையும்
உண்ண உணவில்லை இருநாளா
இருநாளா...
வாட்டியது பசி பட்டினிச்சாவில்
பரிதாப வாழ்வு
ஒருபிடி சோறுண்டு ஒரு கிழமையாகின்றது
அம்மா அக்கா பர்ண மடல்களில்
வந்த பாசவிளக்குகள்

www.tamilarangam.net

நிம்மதியாய் ஒருபிடி சோறு உண்டிடும்
நாள் எதுவோ
நீதி வெல்லுமென்று நீட்டி நிமிர்ந்து
படுத்தவர்கள் நிலை யாதோ?
கல்விமான்கள் என்றவர்கள் கவலையின்றி
திரிகிறார்கள்
இத்தனை நடந்தும் வாழ்கின்றோம்
அந்நிய மண்ணில்
சொல்கின்றோம் தமிழ் மண்ணின்
மக்களாம்
மண்ணை மறப்பதற்காக பேசப்பட்ட
வீண் வார்த்தைகள்தான் எத்தனை
போராட்டத்தை புரியாதவர்கள்போல்
புலம்புகின்றார்கள்
ஐயோ!! அங்கே பிரச்சனையாம்
சனங்கள் பாவமாம்
பாவப்பட்ட சனங்களை பார்க்க
விரும்பாமல்
பகட்டு வாழ்விற்குள் நின்றுகொண்டு
தமிழன் என்ற உணர்வை மறந்து வாழ்ந்து
பாவமென்ற உறவைச் சொல்லி
அழுகின்றார்கள்
மண்ணின் மக்களாம் மார்தட்டுகிறார்கள்
இவர்கள்!

கோப்பாய் - சுரேஸ்
4134, RHEINBERG

www.tamilarangam.net

# தமிழ்த்தாய்

தேமதுரத் தமிழோசை உல-
கெலாம் பரவும் வகை செய்தல் வேண்டுமெனப்
பறைசாற்றினர் பல வேந்தர்கள். யாமறிந்த
மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனியானது
வேறொன்றுமில்லையென்று தமிழின் மீதுற்பட்ட
ஆவலால் சான்று பகர்கின்ற சான்றோர்கள்
பலர்; பலர்.

இப்படிப்பட்ட தமிழ் தரணி-
யில் தோன்றி இன்று ஓர் தனியான இடத்தில்
தவழ்ந்து விளையாடுகின்றது. பொதிகைமலை-
யிலே பிறப்பட்ட தமிழென்றும், தன்மையும்
காவியமும், கற்றோர் சோலைகளும்,
கரும்பு, முக்கனியும், சொரிந்து வரும் நல்
சோலைகளும் நிலவளமாய் பட்ட தெற்கெல்-
லாம் புதுமை உவமானமாய் சாட்டுக்கப்பட்ட
தமிழ் இன்று நம் செந்தமிழல்லாம் யாவும்
நற்றமிழாய் சிறந்து நிற்கின்றது.

கம்பனின் கவியிலே உதயமாகி-
நின்றத் தமிழைத் தாய்ப் பற்றாக பல வேந்தர்
எண்ணியதால் தான் தமிழ் வேதம் நல் உலகம்
தமிழ்த் தேனைச் சுவைக்கக் கூடிய பல அறி-
ஞர்களை எமக்கு அளித்திருக்கிறார்கள். சேர
சோழ, பாண்டியர் என்றும் சண்டை போட்டுக்
கொண்டாலும் தமிழை வளர்ப்பதில் ஆர்வமாக
இருந்தார்கள், கருவாகி, உருவாகி, இலக்கிய-
யாகி, இனிமையாகி, எங்கள் தாயாகி அனைவரின்

www.tamilarangam.net

உலகத்திலெல்லாம் அழியாத நிலையாகி வாழ்கிறது எமது தமிழ் மொழி. இதனால் தான் எமது மொழியின் சிறப்பு பற்றி பல வெளிநாட்டு அறிஞர்கள் ஆய்வுகள் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அனைத்துலக ஆராய்ச்சி மகா நாடு என்னும் பெயரில் அனைத்துலகச் சான்றோர் சபையினிலே சந்தம். என்னும் பொழுது எமது மைந்தர் தமிழின் புகழை பலவழிகளிலும் ஆராய்கிறார்கள். ஆனால் எமது மொழியோடு ஒத்திய ஏனிர்த்துவம் அதைப் பேசும் மக்களால் புறக்கணிக்கப்பட்டு வருவதும் மிகவும் வேதனையானதே. எமது மொழியாரம் பரியங்காலின் பொக்கிஷம், உலகாளுங்களின் அழிவுபட்டு. இப்படிப்பட்ட இனிய தொன்மைகளைக் கொண்டு போற்றப்பட்டது. எம்மிடையே காளான் காய் வளர்ந்து நிற்கும் வேற்று மொழிச் சொற்கள் நீங்கி அகற்றப்பட வேண்டும் எமது மொழியான இயல், இசை, நாடகம், ஆகிய முத்தமிழ்களையும் தமிழ் வளர்த்து பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் காப்பாற்ற வேண்டும். இத்தோடமட்டும் நின்று விடாமல் எமது அன்றாட வாழ்க்கையில் தமிழை கடைப்பிடி-த்து எங்கும் தமிழ், எதிலும் தமிழென்று தமிழை வளர்க்க வேண்டும் என்று முழங்கிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதையை நோக்குவோம்

www.tamilarangam.net

தமிழ் மீள வேண்டும்
தமிழகம் மீட்டு ஆளாக வேண்டும்
மக்களின் அடிமையான நிலைமை அகன்று
நீடு ஓங்க வேண்டும்
தமிழை கொண்டால்
தமிழனை கொல்ல அடிமையாம் என என்றும்
உயிரால் விடு பெறுதல் வேண்டும். -அியவார்
இனி தமிழீழ மக்கள் பெறுதல் வேண்டும்
வாய் திறக்கும் தீய மனப்பான்மை கொல்ல
தாயகத்தை பறிப்பாக்கினான்! இனமேன்? தெய்வத்தின்
மாற்றமாய் வேண்டுவது
வாய்மைத் தமிழனின் வீறுடைமை!
வென்றே! வென்றே!

அ. ஜீவா
DUISBURG

## மனதால்

விழியால் எதையும் காணலாம்!
காதால் எதையும் கேட்கலாம்!
வாயால் எதையும் பேசலாம்!
மனதால் ஒன்றைத் தான் நினைக்கலாம்!

K. காந்தி
3200, HILDESHEIM



க. தர்சிகா
KREFELD

மண் சஞ்சிகையில் வெளிவரும் வினா விடைப் போட்டியை பார்த்து. அவல் கொண்டேன் என்னைப் போன்ற சிறார்களின் தமிழ் அறிவைப் பெற இந்த வினாக்கள் மிகவுதவும் பாவென்றுமென்று மனமார வாழ்த்துகிறேன்.

---

ஆமல்
DUISBURG

மண் இதழில் சில தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி விட்டீர்கள் என்பதைக் கவலையுடன் தெரிவிக்கின்றேன். தயவு செய்து இனி மேலாவது தவறுக்கு வருந்துகிறோம் என்று குறிப்பிடாமல் தவறுகளை விடாமல் சஞ்சிகையை வெளியிடவும். குறுக்கெழுத்துப் போட்டியில் ஏற்படும் தவறு சிறு தடவைகள் மட்டுமல்ல, மீண்டும், மீண்டும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இனியும் வாசகர்கட்கு உங்கள் சஞ்சிகையில் வெறுப்பு ஏற்படச் செய்யாதீர்கள்.

[மேலும் தவறுகள் இடம் பெறாவண்ணம் கவனித்துக் கொள்கிறோம்] ஆ.ர்

---

சி. யோகசுந்தரம்
SWISTTAL

மண் சஞ்சிகையில் வெளியிட்ட அறிஞர்களும், இளைஞர்களுமே வந்து போவதால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிகிறது. இப்புத்தகத்தைப் படிப்பவர் மனதில் தமிழீழ தேசியத்தின் தனிப்பட்ட நிலைக்கும் பகுதிக்கும் மட்டும் விளக்கங்களை வெளியிட்ட படைப்பாக எப்போதும் ஆசிரியப் பிரதாபம் எனக்கூறலாம்.

ஆதலின் புதிய ஆக்க நூல்களையும் கருத்துச் செறிவான ஆக்கங்களையும் வளர்ந்து வரும் விஞ்ஞானத் திறனையும் அறிவியல் ஆக்கங்களையும் எமது நாட்டின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை மற- வாதிருக்கக் கூடிய கட்டுரை, கவிதை, பாடல் என்பனவற்றை சேர்ப்பதானால் "மன்" னின் பெருமை எங்கெட்டுமில்லை அயல்நாட்டிலும் தாய்நாட்டிலும் பெருமைப்பட வாய்ப்புண்டு.

[நாங்கள் முதல் பக்கத்தில் குறிப்பிட்டது தவறான கருத்தாகும். இது இல இக்கதைகளே, பாரின் செல்வர்களுக்கோ மன் முழுவதிலுமுள்ள மன்னிப்பு, தமிழ்மீது பற்றும் கொண்டவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுத்துவரு கிறோம்.

இரண்டாவது பக்கத்தில் குறிப்பிட்ட விடையங்கள் யாவும் எமது அடிப்படை நோக்கமாகும். நோக்கத்தை நிறைவேற்ற உங்கள் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. தங்கள் ஆலோசனைகளை நன்றி பாராட்டுவோம்.]

---

ச. இவாசு. பிறேமணி
யாழ்.
SELM

சிறுவர் வினா விடைப் போட்டி கண்டு மகிழ்ச்சி அடைந்தோம். சிறுவர்களுக்கான விளம்பரங்களை, எழுத்துப் பிழையின்றி எழுதினால் பல காலச் சந்ததியினரும் படித்துப் பயனடைவர்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியசந்திப்பு

ILAKKIYACH CHANTHIPPU

காலம்: 20.04.91

நேரம்: காலை 9.30 மணி.

இடம்: WÖRTH STR 41,
DUISBURG HOCHFELD.
DUISBURG

தொடர்புகளுக்கு:

ILLAKKIACH CHANTHIPPU
c/o P.Amirthanathan,
BraunsbergerWeg 41,
4100 Duisberg 26
Germany.
Tel: 0203/72 77 89

(Duisberg புகையிரத நிலையத்திலிருந்து 934 அல்லது 944 இலக்கப் பேருந்தின் மூலம் PETHESTA KRANKENHAUS என்ற தரிப்பிடத்தில் இறங்கி சந்திப்பு நடைபெறும் மண்டபத்தை அடையலாம்)

வணக்கங்கள்.

எமது தாய்மண்ணிலிருந்து வெளியேறி மேற்கு ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் மத்தியிலிருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் ஆக்கதாரர்களும் வாசகர்களும் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் முகமாக நடைபெற்று வரும் தொடர் நிகழ்ச்சியாக இலக்கியச் சந்திப்பு விளங்கிவருகின்றது.

இரண்டாவது வருடத்தைக் கடந்து நடைபெற்று வரும் இத்தொடரின் பதினோராவது சந்திப்பு 20.04.91 அன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இவ்வழைப்பிதழுடன் கூடிய விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 08.04.91க்கு முன்னதாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

நன்றி.

இலக்கியச்சந்திப்புக்குழு.
(பதினோராவது தொடர்)

விண்ணப்பபடிவம் மறுபக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலக்கியச்சந்திப்பு

(11வது தொடர்)

20.04.91

**நிகழ்ச்சி நிரல்**

09.30-09.45

தேனீரும் காலை உணவும்.

09.45-09.50

வரவேற்புரை.

09.50-10.00

சுயஅறிமுகம்.

10.00-10.45

வாசகர்களின் விமர்சனங்களும் ஆக்கதாரர் ஆசிரியர் குழுவினரின் பதிலும்.

10.45-11.30

ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகள் மீதான கண்ணோட்டம்.

ஆ.வேலாயுதம்.

11.30-12.15

கவியரங்கம்

மதியபோசனம்

13.00-13.45

பெண்கள் சஞ்சிகையான நமது குரல் மீதான பார்வை

ஈஸ்வரி. மு.நித்தியானந்தன்.

13.45-14.15

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியும் பெற்றோர்களின் பங்கும். வசந்தா

14.15-14.30

12 வது இலக்கியச்சந்திப்பிற்கான செயற்குழுவும் நடைபெறும் இடமும் தெரிவு.

14.30-15.15

இலக்கியச் சந்திப்பு, அதன் வளர்ச்சியும் போக்கும்.

சி.சிவராஜன்

15.15-16.00

எனது பார்வையில் இலக்கியச் சந்திப்பு-கருத்துப்பரிமாற்றம்.

சி.ராஜேஸ்வரன்.

16.00-17.00

இரு நாடகங்கள்

17.00-17.15

நன்றியுரை

**பதினோராவது இலக்கியச் சந்திப்பு.**

20.04.91 அன்று நடைபெறவிருக்கும் 11 வது இலக்கியச் சந்திப்பில் நான் கலந்து கொள்ள விரும்புகிறேன். நிகழ்ச்சிக்கான பதிவுக்கட்டணத்தை (8 டி.எம்) தரச் சம்மதிக்கின்றேன். நிகழ்ச்சியில் பங்கு பற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் நிகழ்ச்சிக்கு மூன்று தினங்களுக்கு முன்னதாக அறிவிக்கின்றேன்.

பெயர்:............................................................

முகவரி:............................................................

............................................................

தொலைபேசி இல:............................................................

கையொப்பம்:............................................................

திகதி:............................................................

www.tamilarangam.net

ஆக்கங்களைக்
கீழ்க்காணும்
முகவரிகளில்
ஏதாவது ஒன்றுக்கு
அனுப்பி வைக்கும்படி
வேண்டுகிறோம்.

P.Amirthanathan
Braunsberger Weg 41
41oo Duisburg 26
Tel.o2o3/72 77 89


V.Sivarajah
Angertaler Str.98
41oo Duisburg 28
Tel.o2o3/7o 64 8o

ஆக்கங்களின் கருத்தும்,
நிராகரிப்பு எமக்குரியது

# ERDE

Tamilisches Magazin für Kultur, Literatur und Soziale

வருங்காலங்கள் வரையட்டும்




இவ்விதழ் தொடர்ந்து மலர மனமுவந்த டியக்கோனி,
செஞ்சிலுவை அமைப்பினருக்கு நன்றிகள்


Für die Freundliche **Unterstützung** bei der Herstellung dieses heftes danken Wir dem Diakonischen Werk und Deutsche Rote Kreuz.



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்